சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் திங்கள்கிழமை

இடைமனு எண்.1/2024

இன்

அசல் வழக்கு எண்.51/2011

....

அழகுசுந்தரம் ....மனுதாரர்/உத்தேச 3-ம் பிரதிவாதி

/எதிர்/

1. அ. சந்திரபோஸ் ...1-ம் எதிர்மனுதாரர்/வாதி

2. AL. லெட்சுமணன் செட்டியார் ...2-ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 18.08.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.கோட்டைராமன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.அழகப்பன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.N.மகேஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதியை தாவா வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு தாவா மனுவினை அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் 1908 கட்டளை I விதி 10(2) மற்றும் பிரிவு 151 -ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

தாவா சொத்துக்களைப் பொருத்து கிரைய உடன்படிக்கை ஒன்று கடந்த 20.10.1997-ம் தேதி 2-ம் எதிர்மனுதாரர், 1ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்திருப்ப தாகவும் அதன் அடிப்படையில் மனுதாரரின் தகப்பனார் கிரையப் பத்திரம் எழுதிக்

கொடுக்காததால் குறித்த வகை நிவாரணப்பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரருக்கு தெரிய வந்தது. மனுதாரர் தற்சமயம் தொழில் நிமித்தம் பெங்களூரில் குடியிருந்து வருகிறார். தாவா மொத்த சொத்துக்களும் மனுதாரரது தகப்பனாரை பெற்ற தாத்தாவான அழகுசுந்தரம் செட்டியார் என்பவருக்கு கிரையப் பாத்தியமான சொத்தாகும். பின்னர் மொத்த சொத்தில் பிரிவினை இல்லாத ¼ பாகத்தை மனுதாரரின் தகப்பனாரான 2ம் எதிர்மனுதாரருக்கு 20.03.1958-ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் மூலமாக எழுதி கொடுத்து விட்டார்.

மேலும் மனுதாரரின் தாத்தாவான அழகுசுந்தரம் செட்டியார் தனக்கு பாத்தியமான அனைத்து ஸ்தாவர ஜங்கம சொத்துக்களையும் மனுதாரரின் தகப்பனார் பெயருக்கும் மேற்படியாருடன் உடன் பிறந்த சகோதரரான பெரியணன் பெயருக்கும் பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார். 1ம் எதிர்மனுதாரரால் குறிப்பிடப்படும் 20.10.1997-ம் தேதியிட்ட கிரைய உடன் படிக்கை பத்திரம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணமாகும். பிராதில் 2ம் எதிர்மனுதாரருக்கு மொத்த சொத்தில் 43 ஏக்கர் பாத்தியம் என்று குறிப்பிட்டுவிட்டு பிராது சொத்து விபரத்தில் 35.00.00 ஹெக்டேர்ஸ்க்கு 1ம் எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்களில் மனுதாரரின் தகப்பனாருக்கு கிடைக்கக்கூடிய பாகத்தில் மனுதாரருக்கு பிரிவினை இல்லாத 1/3 பாகம் கிடைக்கக்கூடியதாக உள்ளது. மேற்சொன்ன கிரைய உடன்படிக்கை உண்மை என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்தாலும் தாவா சொத்தில் மனுதாரருக்குரிய பிரிவினை இல்லாத 1/3 பாகத்தை சேர்த்து மனுதாரரது தகப்பனார் கிரைய உடன்படிக்கை எழுதி கொடுக்க முடியாது.

எனவே தாவா வழக்கில் மனுதாரர் அவசிய தரப்பினர் ஆவார். எனவே மனுதாரரையும் தாவா வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு தாவா வழக்கை மேல்நடத்த வேண்டியுள்ளது. மேற்படி மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர் களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படக்கூடியதில்லை. இல்லாவிடில் மனுதாரர் தரப்பிற்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். ஆகவே மனுதாரரை தாவா வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>**

2-ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் தாவா கிரைய உடன்படிக்கை ஏற்பட்ட காலத்தில் அவரது மகன்களுக்கு தாவா சொத்துக்களில் எந்தவித பாத்தியமும் இல்லை என தெளிவாக குறிப்பிட்டுள்ளதை மறைத்து விட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது 23.02.2011ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரர் 26.09.2011ல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். 13 ஆண்டுகள் கழித்து Belated ஆக காலதாமதத்திற்கு எவ்வித முகாந்திரமுமின்றி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதை எப்போது மனுதாரர் தெரிந்து கொண்டார் என மனுவில் தெரிவிக்கவில்லை. மனுதாரர் பிரஸ்தாபித்துள்ள 20.10.1997-ம் தேதிய கிரைய உடன்படிக்கையில் மனுதாரர் ஒரு தரப்பினராக கையெழுத்திடவில்லை. மேற்படி கிரைய ஒப்பந்தத்தில் 2வது பார்ட்டியின் மேஜர் குமாரர்கள் இருவரிடமும் தேவையான கையெழுத்துக்களை வாங்கி மேற்படி கிரையப்பத்திரத்தை பதிவு அலுவலகத்தில் உரிய முறைப்படி பதிவு செய்து கொடுக்க மனுதாரரின் தகப்பனார் ஒப்புக்கொண்டிருந்த விபரம் மனுதாரருக்கு தெரிந்திருந்தும் அதனை மனுவில் துலக்க தவறிவிட்டார். மொத்த சொத்தான 86 ஏக்கரில் மனுதாரரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பிரிவினை இல்லாத 4ல் 1 பங்கு பாத்தியமான 22 ஏக்கர் உள்ளதும், மேற்படியாரின் தகப்பனார் எழுதிய உயில்படி பாத்தியப்பட்ட 10 ஏக்கர் உள்ளதும், மேற்படியாரின் சகோதரர் ராமநாதன் செட்டியாரிடம் கிரையம் வாங்கிய கிரையப் பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்ட 11 ஏக்கர் உள்ளதும் ஆக மொத்தம் 43 ஏக்கர் உள்ள பிரிவினையில்லாத மொத்த சொத்தில் கட்டுப்பட்ட மனுதாரரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 43 ஏக்கர் 22. ½ செண்ட் உள்ள புஞ்சை நிலத்திற்கு தான் மேற்படி 20.10.1997-ம் தேதிய கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மனுதாரர் கூறுவது போல் 20.10.1997-ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் அல்ல. கிரைய ஒப்பந்தத்தை 1ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்ததை மனுதாரரின் தகப்பனார் தனது எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளார். தாவா வழக்கு 35.00.00 ஹெக்டேர்ஸ்க்கு தாக்கல் செய்யப்படவில்லை. தாவா சொத்துக்களில் மனுதாரரின் தகப்பனாருக்கு

கிடைக்கக்கூடிய பாகத்தில் மனுதாரருக்கு பிரிவினை இல்லாத 1/3 பாகம் கிடைக்கக் கூடியதில்லை. ஏனெனில் மனுதாரரின் தாத்தா அழகுசுந்தரம் செட்டியார் மொத்த சொத்தில் பிரிவினையில்லாத ¼ பாகத்தை மனுதாரரின் தகப்பனாருக்கு 20.03.1958ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் மூலம் கிரையப் பாத்தியம் எனவும், மனுதாரரின் தாத்தாவான அழகுசுந்தரம் செட்டியார் தனக்கு பாத்தியமான அனைத்து ஸ்தாவர சங்கம சொத்துக்களையும் மனுதாரரின் தகப்பனாருக்கும், அவரது சகோதரருக்கும் பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்திருப்பதாகவும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மனுதாரருக்கும் கிரைய உடன்படிக்கை சொத்தில் 1/3 பாகம் கிடைக்கத்தக்கதல்ல. எனவே மேற்படி வழக்கை தீர்மானிப்பதற்கு மனுதாரர் ஒரு அவசியமான, தேவையான கட்சிக்காரர் ஆகமாட்டார். எனவே தாவா மனு செல்லத்தக்கதல்ல. எனவே தனக்குரிய பிரிவினையில்லாத 1/3 பாகத்தைச் சேர்த்து தனது தகப்பனார் கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுக்க முடியாது என்ற மனுதாரரின் கூற்றை முற்றிலும் நிராகரிக்க வேண்டும். மனுதாரர் துலக்கியுள்ள முன் பாத்திய விபரங்களை காட்டக்கூடிய எந்த ஒரு ஆவணத்தையும் மனுவுடன் தாக்கல் செய்யவில்லை.

தாவா வழக்கை தீர்மானிப்பதற்கு மனுதாரரை இவ்வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்க்கவேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. சீனியர் சிட்டிசனான 1ம் எதிர்மனுதாரருக்கு மன உளைச்சலையும், வீண் அலைக்கழிவையும் ,வீண் விரயத்தையும் உண்டுபண்ணுவதோடு 13 ஆண்டுகளுக்கு முன்பு தாக்கல் செய்யப் பட்ட மேற்படி வழக்கின் விசாரணையை முடிவடைய தாமதமாகிவிடும். அதனால் தாமதிக்கப்பட்ட நீதி 1ம் எதிர்மனுதாரருக்கு மறுக்கப்பட்டதாகிவிடும் அபாயம் உள்ளது. 2ம் எதிர்மனுதாரரின் தூண்டுதலின் பேரில் தாவா வழக்கின் விசாரணையை தாமதப்படுத்தும் கெட்ட எண்ணத்துடன் மனுதாரரால் பொய்யான சங்கதிகளைக் கண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை 1ம் எதிர்மனுதாரர் தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

**5**. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6**. இந்த மனுவின் 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் வாதி. 2ம் எதிர்மனுதாரர் பிரதிவாதி. மனுதாரர்/உத்தேச 3ம் பிரதிவாதி 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் மகன். தாவா மொத்த சொத்துக்களும் மனுதாரரின் தாத்தாவான அழகுசுந்தரம் என்பவருக்கு கிரையப் பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதில் பிரிவினை இல்லாத ¼ பாகத்தை மனுதாரரின் தகப்பனாரான 2ம் எதிர்மனுதாரருக்கு 20.03.1958-ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் மூலமாக எழுதி கொடுத்து விட்டதாகவும், அதனால் மனுதாரர் அவசிய தரப்பினர் என்றும், எனவே மனுதாரரையும் தாவா வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு தாவா வழக்கை மேல்நடத்த வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7**. அசல் வழக்கானது 23.02.2011ல் தாக்கல் செய்யப்பட்டு 13 ஆண்டுகள் கழித்து தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் 20.10.1997-ம் தேதிய கிரைய உடன்படிக்கையில் ஒரு தரப்பினராக கையெழுத்திடவில்லை எனவும், 20.10.1997-ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் மோசடியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் அல்ல எனவும் தாவா அசல் வழக்கை தீர்மானிப்பதற்கு மனுதாரர் ஒரு அவசியமான, தேவையான கட்சிக்காரர் அல்ல எனவும், 1ம் எதிர்மனுதாரருக்கு மன உளைச்சலையும், வீண் அலைக்கழிவையும் ஏற்படுத்தவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரரால் பொய்யான சங்கதிகளைக் கண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**8**) அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப் பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனுதாரரை உத்தேச 3ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கை நடத்தக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் அவசியமற்ற தரப்பினர் என தெரிவிக்கப்பட்டிருந்தாலும் 2ம் எதிர்மனுதாரரின் மகன் மனுதாரர் என்பதால் அவரை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்ப்பதால் வழக்கின் தன்மையானது எவ்விதத்திலும் மாறுபடப்போவதில்லை. 1ம் எதிர்மனுதாரர் கூறியுள்ள கூற்றிற்கு ஆதரவாக எவ்வித ஆவணமும், வாய்மொழி சாட்சியமும் இல்லை. மனுதாரரை இவ்வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்த்து நடத்துவதில் யாருக்கும் எவ்வித தீங்கும் ஏற்பட போவதில்லை. அசல் வழக்கானது இருதரப்பு விசாரணைக்கு பின்பு தான் தீர்மானிக்க இயலும். ஆகவே வழக்கின்

சங்கதிகளை கருத்தில் கொண்டும் அசல்வழக்கு ஏற்றதை ஆற்றுக பரிகார வழக்காக இருப்பதாலும் மனுதாரரை 3ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கை மேல்நடத்துவது நீதியின் நலனுக்கு உகந்ததாக கருதி தாவா மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக தாவா மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.09.15 17:29:32 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் - இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.09.15 17:29:39 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court,
Sivagangai
I.A.No.1/2024 in
O.S.No.51/2011
**Draft/Fair/Order**
15.09.2025